# விருதுநகர் மாவட்டம்
## அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

- - - - -

## வகுப்பு 12

கால அளவு : 3 மணிநேரம் **வரலாறு** மதிப்பெண்கள் : 90

### பகுதி-I

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**20×1=20**

1) "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K.காந்தி
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

2) "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" எனக் கூறியவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்

3) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம்
ஆ) G.சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்
இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச்சட்டம், 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

4) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

5) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) பானர்ஜி ஈ) M.G. ரானடே

6) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?
அ) இராஜாஜி ஆ) சித்தரஞ்சன் தாஸ் இ) மோதிலால் நேரு ஈ) சத்தியமூர்த்தி

7) பின்வருவனவற்றைப் பொருத்துக.
அ) கான்பூர் சதி வழக்கு - 1) அடிப்படை உரிமைகள்
ஆ) மீரட் சதி வழக்கு - 2) சூரியா சென்
இ) சிட்டகாங் ஆயுதக் கிடங்கு கொள்ளை - 3) 1929
ஈ) இந்திய தேசிய காங்கிரஸின் கராச்சி மாநாடு - 4) 1924
அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,2,1

8) முதலாவது பயணிகள் இரயில் 1853இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹீக்ளி

9) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

10) இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர் ஹசன்

11) இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ______ ஆகும்.
அ) சுபாஷ் படைப்பிரிவு ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு ஈ) ஜான்சிராணி படைப்பிரிவு

12) இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?
அ) வின்ஸ்டன் சர்ச்சில் ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு
இ) கிளமண்ட் அட்லி ஈ) ரூஸ்வெல்ட்

13) கூற்று : ராட்கிளிஃபின் எல்லை வரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.
காரணம் : முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

14) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

15) இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?
அ) 1951 ஆ) 1952 இ) 1976 ஈ) 1978

16) பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

17) மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக் கப்பல் திரும்பியது?
அ) சாண்டா மரியா ஆ) பிண்ட்டா இ) நினா ஈ) விட்டோரியா

18) வட அமெரிக்காவில் முதன்முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள்
அ) போர்த்துக்கீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

19) பன்னாட்டு சங்கம் ______ ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.
அ) 1939 ஆ) 1941 இ) 1945 ஈ) 1946

20) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ______ ஆவார்.
அ) யாமமோடோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிடோ

## பகுதி-II

**குறுகிய விடையளி. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×2=14**

21) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
22) பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
23) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
24) பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
25) இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என்.டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
26) அரசமைப்பின் ஷரத்து 370ன் முக்கியத்துவம் என்ன?
27) பிளாரன்சின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
28) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
29) ரோம்-பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?
30) முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் என்ன?

## பகுதி-III

**சுருக்கமான விடை தருக. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×3=21**

31) பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலிதொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
32) அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
33) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன்?
34) மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக.
35) 1921இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?
36) இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
37) 1492 இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
38) அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
39) இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
40) அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக. 7×5=35**

41) அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச்சென்றது?

42) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க. **(அல்லது)**
ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

43) அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக. **(அல்லது)**
ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

44) அ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

45) அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும். **(அல்லது)**
ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

46) அ) இரண்டாம் உலகப் போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக. **(அல்லது)**
ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
(i) பம்பாய் (ii) சென்னை (iii) கல்கத்தா (iv) லக்னோ (v) சூரத்

47) அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும். **(அல்லது)**
ஆ) கி.பி.1900 முதல் கி.பி.1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு விரைந்து காட்டுக.

----------